8214.

| 8 - STD | அரையாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2.30 மணி | அறிவியல் | மதிப்பெண்கள்: 100 |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **10 x 1 = 10**

1. கீழ்க்காணும் திரவங்களில் எது அதிக பாகுநிலை உடையது?
   (அ) கிரீஸ் (ஆ) நீர் (இ) தேங்காய் எண்ணெய் (ஈ) நெய்
2. திரவ நிலையிலிருந்து திட நிலைக்கு மாறும் நிகழ்வு ______ என்று பெயர்.
   (அ) பதங்கமாதல் (ஆ) குளிர்வித்தல் (இ) உறைதல் (ஈ) படிதல்
3. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக
   (அ) ஹார்மோனியம் (ஆ) புல்லாங்குழல் (இ) நாதஸ்வரம் (ஈ) வயலின்
4. காகிதம் எரிதல் என்பது ஒரு ______ மாற்றம்
   (அ) இயற்பியல் (ஆ) வேதியியல் (இ) இயற்பியல் மற்றும் வேதியியல் (ஈ) நடுநிலையான
5. நீரில், ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் ஆகியவை ______ நிறை விகிதத்தில் இணைந்துள்ளன.
   (அ) 1:8 (ஆ) 8:1 (இ) 2:3 (ஈ) 1:3
6. சிவப்பு எறும்பின் கொடுக்கில் ______ அமிலம் உள்ளது.
   (அ) அசிட்டிக் அமிலம் (ஆ) சல்பியூரிக் அமிலம்
   (இ) ஆக்ஸாலிக் அமிலம் (ஈ) ஃபார்மிக் அமிலம்
7. உண்ணத் தகுந்த காளான் ______
   (அ) பாலிபோரஸ் (ஆ) அகாரிகஸ் (இ) பெனிசிலியம் (ஈ) அஸ்பர்ஜில்லஸ்
8. ______ செல்கள் சிறப்பு வாய்ந்த செல்களாகும். இவை உடலின் எந்தவொரு செல்லாகவும் மாற இயலும்.
   (அ) நரம்பு (ஆ) மூல (இ) இதய (ஈ) எலும்பு.
9. உங்கள் வெளிப்புறக் காதைத் (Pinna) தாங்குவது ______
   (அ) எலும்பு (ஆ) குருத்தெலும்பு (இ) தசைநார் (ஈ) காப்ஸ்யூல்
10. ஆடம்ஸ் ஆப்பிள் என்பது இதன் வளர்ச்சி மையத்தைக் குறிக்கிறது.
   (அ) தொண்டைக்குழி (ஆ) தைராய்டு (இ) குரல்வளை (ஈ) பாரா தைராய்டு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **10 x 1 = 10**

11. மின்னோட்டத்தினை அளவிடப் பயன்படும் கருவி ______
12. கண் மருத்துவர் கண்களைப் பரிசோதிக்கப் பயன்படும் ஆடி ______
13. மூன்று மின்விளக்குகள் ஒரே சுற்றில் மின்கலத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மின்சுற்று ______ எனப்படும்.
14. ஒலி ______ ஆல் உருவாக்கப்படுகிறது.
15. கரிக்கோலின் (பென்சிலின்) நடுத்தண்டில் இருப்பது ______
16. ______ அத்தியாவசியமான உயிர் மூலக்கூறு எனப்படுகிறது.
17. நீரின் கொதிநிலை ______
18. நுண்ணுயிர்கள் ______ இல் அளவிடப்படுகின்றன.
19. ______ தசை கண் பாவையை அகலமாக்குகிறது.
20. தைராய்டு சுரப்பி தொடர்புடைய நோய்களைத் தடுப்பதில் ______ உதவுகிறது.

**III. சரியா? தவறா? என எழுதுக. தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக** **5 x 1 = 5**

21. குவார்ட்ஸ் கடிகாரங்கள் GPS கருவிகளில் பயன்படுத்தப்படுகின்றன.
22. நீர் மின்சாரத்தைக் கடத்தும்.
23. பெரும்பாலான அமிலங்கள் நீரில் கரைவதில்லை.
24. CFC என்பது ஒரு மாசுபடுத்தியாகும்.
25. மனிதன் ஒரு வெப்ப இரத்தப்பிராணி.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

**IV. பொருத்துக** **6 x 1 = 6**

26. சர்வ கரைப்பான் - நீர் மாசுபடுத்தி
27. கடினநீர் - கிருமிகளைக் கொள்ளுதல்
28. கொதித்தல் - ஓசோனேற்றம்
29. நுண்ணுயிர் நீக்கம் - நீர்
30. கழிவு நீர் - வயிற்று உபாதைகள்
31. வடிகட்டுதல் - கல்கரி

**V. காரணம் கூறு** **3 x 3 = 9**

32. குளிர் காலங்களில் ஏரிகளின் மேற்பரப்பு உறைந்திருந்தாலும், அதன் கீழ்பகுதி உறையாமல் உள்ளது.
33. மீன் நீரில் இருந்து வெளியே எடுத்தவுடன் இறந்து விடுகிறது.
34. கண்ணைப் புகைப்படக் கருவியுடன் ஒப்பிடுகிறோம்.

**VI. எவையேனும் 15 வினாக்களுக்கு சுருக்கமான விடையளி** **15 x 2 = 30**

35. அளவீடு என்றால் என்ன?
36. பரப்பு இழுவிசை தாவரங்களுக்கு எவ்வாறு உதவுகிறது?
37. குவியத் தொலைவு வரையறு?
38. வெப்பம் கடத்தப்படும் முறைகள் யாவை?
39. புவித் தொகுப்பு என்றால் என்ன?
40. மீயொலி என்றால் என்ன?
41. ஒலி மாசுபாட்டினைக் குறைக்க எடுக்கவேண்டிய இரண்டு நடவடிக்கைகளை குறிப்பிடுக.
42. ஏன் ஆலய மணிகள் உலோகங்களால் செய்யப்படுகின்றன?
43. மாசுபடுதல் என்றால் என்ன?
44. உலக வெப்பமயமாதல் என்றால் என்ன?
45. பொருண்மை அழியா விதி - வரையறு.
46. கொதிநிலை வரையறு.
47. நீரின் கடினத்தன்மையை நீக்கும் முறைகள் யாவை?
48. அமிலங்கள் மற்றும் காரங்கள் ஆகியவற்றிற்கு இடையேயான வேற்றுமைகள் யாவை?
49. எதிர் உயிர்க்கொல்லி என்றால் என்ன?
50. காற்று நுண்ணறைகளின் பணிகளைக் கூறுக.
51. இயக்கம் மற்றும் இடப்பெயர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு யாவை?
52. பறவையின் எலும்புக் கூடு எவ்வாறு பறப்பதற்கு ஏற்றதாக உள்ளது?
53. வளரிளம் பருவம் என்றால் என்ன?
54. வளரிளம் பருவம் குழந்தைப் பருவத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

**VII. எவையேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விரிவாக விடையளி** **6 x 5 = 30**

55. அடிப்படை அளவுகளை அவற்றின் அலகுகளுடன் பட்டியலிடுக.
56. தொடர் மற்றும் பக்க இணைப்புச் சுற்றை விளக்குக.
57. ஒலி மாசுபாட்டின் விளைவுகள் யாவை?
58. பின்வரும் குறியீடுகளால் குறிக்கப்பெறும் தனிமங்களின் பெயர்களை எழுதுக!
   (அ) Na (ஆ) Ba (இ) W (ஈ) Al உ) U
59. எலக்ட்ரான்கள் எதிர்மின்னூட்டம் கொண்டவை என்பதை எவ்வாறு நிரூபிப்பாய்?
60. நமது அன்றாட வாழ்வில் நடைபெறும் நடுநிலையாக்கல் வினைகளை விளக்குக.
61. மருத்துவத் தாவரங்களின் பெயர்களை எழுதி அவற்றின் பயன்களை விவரிக்கவும்.
62. மூட்டுகளின் வகைகளைக் கூறுக. ஒவ்வொரு வகைக்கும் ஒரு எடுத்துக்காட்டு தருக!
63. வளரிளம் பருவமானது ஆற்றல்மிக்க பருவம். இப் பருவத்தில் எந்த மாதிரியான ஆரோக்கியம் மற்றும் நல்ல பழக்கங்களை நீங்கள் உருவாக்க விரும்புகிறீர்கள்?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam